**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 104** **நாள்: 05.08.2016**

## பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை சார்பாக மாணவ, மாணவியர்களுக்கான போட்டித்தேர்வுக்கான பயிற்சி !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் படித்த ஏழை, எளிய பட்டம் பெற்ற இளைஞர்கள், மாணவர்களின் கல்வி மேம்பாடு, வேலைவாய்ப்பு, அகில இந்திய/மாநில அளவிலான பல வேலைவாய்ப்புகள் மற்றும் உயர்கல்விக்கான போட்டித் தேர்வுகள் எழுதிடவும், அப்பகுதியின் பட்டம் பெற்ற இளைஞர்கள், மாணவர்களின் தேவைக்கேற்றவாறு பயிற்சியானது கல்வித்துறையின் மூலம் 2014–2015, 2015–2016 ஆகிய இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட திட்டத்தினை செயல்படுத்த 2016–2017ம் ஆண்டு ஆகஸ்ட் 2016 இரண்டாவது வாரத்தில் செனாய் நகர், அம்மா அரங்கத்தில் பயிற்சி தொடங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ள மாணவ, மாணவியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையிலும் மற்றும் செனாய் நகர் அம்மா அரங்கத்திலும் இதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இதற்கான விவரங்களை கல்வித்துறையின் தொலைபேசி எண்–044–2561 9462 (ம) அலைபேசி எண்–86755 37589 என்ற எண்களிலும் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**